2002
April



AD-46 மருந்துசெய்முறை

ஏடெண் : AD 46

பெயர் : மருந்து செய்முறைகள்

அளவு : 22 x 2.5

வரி : 5-6

ஏடெண்ணிக்கை : 28

படி எடுத்தவர் : கு. வெட்டம்மா.

மொத்த பக்கங்கள் : 26

எடுத்த தேதி : 14. 4. 2002

முடித்த தேதி : 19. 4. 2002

அ-46. மருந்து செய்முறை

1. பஞ்சசூதமெழுகு

வீரம், பூரம், லிங்கம், இரச
செந்தூரம், நெல்லிக்காய் கெந்தகம் வகைக்கு
வராகனெடை, முன் சொல்லிய நெல்லிக்காய்
கெந்தகத்தை குழி அம்மியில் நன்றாய் பொடித்து
அதை 5 பங்கு பண்ணி அதில் இரண்டு பங்குப்
பொடியை வேறே வைத்துக் கொண்டு ஒரு சிறு
கரண்டியில் முன் சொல்லிய வீரத்தை யிட்டு கல்வத்
திலுள்ள இரண்டு பங்கு கெந்தகப் பொடியால்
கொஞ்சம் போட்டு விளக்கு தீயில் பிடிக்க
கெந்தகம் உருகிய பதத்தில் கீழ் மேலாய் வீரத்தைப்
புரட்டி வறுத்து இப்படியே கொஞ்சம் கொஞ்சம்
பொடியாய் இரண்டு பங்குப் பொடியுமிட்டு
அடிக்கடி வீரத்தைப் புரட்டிப் புரட்டி வறுத்து
முகர்ந்து பின் மேற்படி வீரத்தை கல்வத்தில்

தனியே வைத்து பூரம், லிங்கம், இரசசெந்தூரம்
இம் மூன்றையும் முன்னுள்ள கரண்டியிலிட்டு
கல்வத்தில் பாதியா இருக்கிற மூன்றுபங்கு கெந்தகப்
பொடியை முன் போலவே கொஞ்சம் கொஞ்சமா
யிட்டு வறுத்து முடிந்த பின் கல்வத்திலிட்டு
கரண்டியில் மீதியிருக்கிற மருந்தை சுரண்டி கொண்டு
அரண்ட கல்வத்தில் சேர்த்து பின்னால் வறுத்த
மூன்று மருந்தையும் நன்றாய் பொடித்து முன்னால்
வறுத்த பூரத்தை பொடித்த பொடியுடன் சேர்த்து
சரக்கு உருஅ சேரப் பொடித்து கொஞ்சம் தேன்
விட்டு இளகிய பதமாய் அரைத்து பின்பு தனியே
பொரித்த வெங்காரப் பொரி வராகனெடை 1 சிறுக
சிறுக மருந்துடன் சேர்த்தரைத்து மெழுகு போலான
பதத்தில் 3டு வராகனெடை கூடான உதிர்ந்து
தூளாக்கி வைத்து கொண்டு சிறுகச் சிறுக மெழுகுடன்
சேர்த்து அரைக்கவும். இப்படி அஞ்சு நாழிகை
அரைத்த பின் மெழுகுகையால் ஒட்டாத பதத்தில்
எடுத்து மருந்து மேற் சிமிழிலடைத்து வைத்து
கொண்டு சன்னி மறைந்த ரோகங்களுக்கும் சுக

சன்னி கண்டவர்களுக்கும் பிள்ளைப்பெற்ற
அறையில் அழுக்குத் தங்கி தடிப்பானச் சிவப்பான
சுர முதலிய சன்னி கண்டவர்களுக்கும் காலமே
3. தின இஞ்சி சாற்றிலும் அல்லது இஞ்சி கொத்த
மல்லி வேம்புயிர்க்கு சாரத்திலும் சாயந்திரம்
அரத்தை, சுக்கு, தேவதாரம், கொத்தமல்லி வேம்பு
யிர்க்கு, ஓமம், வெற்றிலை காம்பு, வெள்ளைப்பூடு
நொச்சிப்பட்டை, மாவிலங்கப்பட்டை, காட்டா
மணக்குப்பட்டை, கொடிவேலிவேர், வேளை
வேர் இவைகள் சேர்ந்த சாரங்களில் தினமுமட்டு
ஒரு குன்றிமணி அளவு முன் செய்த மெழுகுமட்டு
அந்தி சந்தி மூன்று பொழுது கொடுக்கவும் தினம் |
அல்லது அஞ்சு, ஆறு பொழுது கொடுக்கவும் சன்னி தீரும்.
சன்னியின் போனபின் மாரச்சி விக்கல் இருமல்,
மேல்மூச்சு இவைகள் உண்டானால் தேன் முலைப்
பால் இவைகளில் முன் சொல்லிய அளவு சரீரம்
பலம் அறிந்து கொஞ்சம் ஏற குறைய கொடுக்க
தீரும். குழந்தைகளுக்கு சன்னி கண்டால் வெற்றிலைச்
சாறு வெள்ளைப் பூடு தயிலம் இரண்டும் சேர்த்து

அதில் பாசிப் பயறு உருந்து அளவு மெழுகு வைத்து
கொடுக்கவும். தேன் மிளைப்பாலிலும் இம்மெழுகு
வைத்து கொடுக்கவும். அந்தி சந்தி மூன்று பொழுது
கொடுக்கவும் தீரும். வெள்ளைப் பூடு தயிலமாவது

4. வெள்ளைப் பூடை உசலையோடே நல்ல நசுக்கி
ஒரு பீரச் சீசாவில் வைத்து பெருங்காயத்தை தணலில்
முழுகப் பொரித்து ஒரு குன்றிமணி அளவு பொடி
செய்து முன்னுள்ள வெள்ளைப் பூட்டின் கலந்து
பீரச் சீசாவில் ஒரு பொட்டணமாய் நூற
அழுந்து சிறிது நேரம் வைத்திருந்து பிறகு கசக்கிப்
பிழிய தயிலம் வரும். வெந்நிலையே தணலில்
அடுப்பு காய்ச்சிப் பதிந்த சாறு ஒரு பொட்டு
கரண்டு அளவும் கிடைத்த வெள்ளைப் பூடு
தயிலம் சேர்த்து முன் சொல்லிய மெழுகிற் சேர்த்து
கொடுக்கவும். இதன்னமல் தினக்கு மூன்றுநாள்
வரையில் உபயோகித்தால் நாபசுரம் கண்டால்
பிறகு சன்னி வலி மென்டொன்னி இஞ்சி
சுரசம் சுக்கு, அரத்தை தேசாவரம் சேர்ந்த
சுரத்தில் மூன்று பொழுது கொடுக்க தீரும். அல்லது
சுரம் இருவாரம் நின்று வரும் - சுக மண்டலம்.

## லிங்கராசமுகு

லிங்கம், சூதம் வகைக்கு

வராகனெடை 1, கொடுவேலி வேர்ப்பட்டை
வராகனெடை 2, மேற்படி வேர்ப்பட்டையை
கல்வத்திலிட்டு முலைப்பால் விட்டு மெழுகுபோல்
அரைத்து ஒரு பருப்பு கரண்டியிலிட்டு மேலும்
5. கொஞ்சம் முலைப்பால் விட்டு குழப்பி முன்
சொன்ன சூதம் லிங்கத்தை பதிலிட்டு பொதித்து
அடுப்பேற்றி சிறு தீயாய் சோதியிட்டு சேறு
போல குழைய பதத்தில் கல்வத்தில் வழித்து
போட்டு இரண்டு சாமம் உறவு சேர தேன்
விட்டு அரைத்து சிமிழில் அடைத்து வைத்து
கொண்டு இந்த சூரணம் சுக்கு அரத்தை நேரளவும்
சேர்ந்த சூரணம் இதுகளில் ஒரு குன்றிமணி அளவு
தேன் மெழுகு சேர்த்து மூன்று பொழுது அஞ்சு
பொழுது கொடுக்க சன்னி தீரும். சுரத்தின்
மேலுள்ள வாதம், வலி தீரும். பல்லாலெற்ற
-வலிக்கு அதுக்கு துவாலை சிக்கல் தீரும். பனை
வெல்லத்தில் கொடுக்க மூன்று பொழுதில் அல்லது
6 பொழுதில் மேகவாய்வு, இளை இதுகளெல்லாம்

பெண்களுக்கு பெரும்பாடு கண்டால் -
நாவல்பட்டை ச்சாற்றிலும் அல்லது பனை
வெல்லத்திலும் காலமே மூன்று பொழுது கொடுக்க
தீரும்.

### சின்னிக்கி சுடர் தயலம்

இரசம், நெல்லிக்காய்கெந்தகம்,
கிருநாரா, வெங்காரம், சுத்தி செய்த நேர்வாளம்
பருப்பு, துத்தம், மனோசிலை, நெற்றாசம், லிங்கம்,
6. கௌரிபாசாணம், தாளகம், துருசு, சீனக்காரம்,
துத்தி மஞ்சள் அக்காநீறு நாறுங்கருப்பாக்கு)
ஆக 16 சரக்கும் வராகனெடை ஒன்று இவை
எல்லாம் கல்வத்திலிட்டு முன்னமே ரசம்
கெந்தகம் இரண்டையும் அரைத்து (ரசமடங்கி)
உருளையில் இதில் சொல்லியதுள்ளதை சேர்த்து
அரைக்க இரசம் மடிந்திருக்கும் அதை கல்வத்தில்
ஒரு பக்கம் ஒதுக்கி வைத்து கொண்டு தாளகம்
மனோசிலையுடன் சேர்த்து பொடிசெய்து அதில்
துத்தம் சேர்த்து பொடி செய்து முன் பொடியுடன்
ஒதுக்கி வைத்து வைத்துள்ள மற்றதுள்ள 10 சரக்கும்
நன்றாய் பொடி செய்து முன்னமே பொடித்த

பொடியோடு சேர்த்து உடைய 16 சரக்கும்
எருக்கம் பால் விட்டு மூன்று நாழிகைக்கு குழை
யாமம் வெண்ணெய் போலே அரைத்து வில்லைச்
சீலையில் நடுவா இரண்டு தோலாக்க வெயிலிலே
கொஞ்சம் உலர்ந்த பதத்தில் 1/4 படி வேப்
பெண்ணெயில் ஒரு நாளை நனைத்து கொளுத்தி
எண்ணெய் முழுதும் சுட்டு எடுத்து சுடர் எடுத்த
மேற்படி எண்ணெயில் இரண்டாவது தினமும்
7. சுடர் எடுத்து சீசாவில் எண்ணெயை வைத்துக்
கொண்டு மேலும் தேவையாக கூடு
உள்ளுக்கு மூன்று சொட்டு ஆறு சொட்டு
சரக்குகளில் ஒரு வாரகாலம் வீதம்
கொடுக்க தனுர்வாத சன்னி, சுக சன்னி, இரண
சன்னி, சகல சன்னியும் தீரும். வாதம் 80
வாய்வு படைப்புகளும் தீரும். இது குழந்தை
முதல் எல்லோருக்கும் பிள்ளை பெற்றவளுக்கும்
ஆகும். பூரணமான மருந்தியம்.

## பேதிக்கு

பெருங்காயம், இந்துப்பு அசை,
திப்பிலி, கருஞ்சீரகம், கார்போகரிசி வகைக்கு வராகனெடை
-க.வ. சுத்தி செய்த நேர்வாளம் பருப்பு வராகனெடை வகை
கொட்டை போக்கிய கடுக்காய் தோல் வராகனெடை 10
தோல் போக்கி உலர்ந்த வெள்ளைப் பூண்டு வராகனெடை 10
இவையெல்லாம் வேலிபருத்திச் சாறு விட்டு அம்மியில்
மெழுகு போல் அரைத்து ஒரு சட்டியிலிட்டு அதில் 1/2
படி வேலிப்பருத்திச் சாறும் விட்டு 1/2 படி தேங்
காய்ப்பால் விட்டு அரைவீசம்படி பசுவின் பால்
விட்டு மருந்தையெல்லாம் நன்றாய் கரைத்து அதில்
வீசம் அரைவீசம் படி ஆமணக்கெண்ணெய் விட்டு
8. அடுப்பேற்றி எரித்து மெழுகு பதத்தில் எண்ணெயை
வடித்து தணலில் பொரிந்த வெங்காரம் பொரி ஒரு
வராகனெடை பொடித்து எண்ணெயில் போட்டு
ஒரு சீசாவில் அடைத்து வைத்துக் கொண்டு ஒரு
கரண்டி அல்லது அரை கரண்டி வீதம் சிற
வயதறிந்து கொடுக்க கள்ளி முட்டைப் பாய்ந்து
சாறு அரைக்கால் படி அல்லது வீசம்படி சாத்தில்

மேற்படி எண்ணெய் விட்டு சாப்பிடவும். பேதி
யாகும். பத்தியம் கொஞ்சம் காரமாயுள்ள புளி
சேர்ந்த மிளகு நீருஞ் சாதமும் காலை காரம் செய்யவும்.
பின்னும் பேதியாகி சிரமங்களையுண்டானால்
சுத்த சலம் அல்லது வெந்நீரில் நன்றாய் தலை
முழுகி புளித்த மோருஞ் சாதமுமாய் காலை
காரம் செய்யவும். பிசுக்களை உண்டானால்
எலுமிச்சம்பழம் சேர்த்து கொள்ளலாம். மேல்
ரோக முள்ளவர்களுக்கு யிந்த எண்ணெய்கள்
கொடுத்தால் புளியில்லா கறியுங் கஞ்சியும் வைத்து
சாப்பிடவும். மறுதி நன்றாய் பேதியான பின்பு
சுத்த தண்ணீர் வென்னீர் இதில் தலை முழுகி முன்
சொல்லியபடி மோருஞ் சோறும் சாப்பிடவும்.
அன்று இராத்திரிக்கு வெங்காயம், துவரம் பருப்பு,
9. மாங்கொட்டை வெள்ளைப்பூடு, கத்திரிக்காய்,
முருங்கைக்காய் இவைகள் குழம்பு செய்து கொண்டு
வேண்டியது சாப்பிடவும். மறுநாள் காலமே சிக்கிரம்
பசையுள்ள முதல் ஆகாரம் பார்க்கவும். உடனே எண்ணெய்
தேய்த்து தலை முழுகவும். மேகவாய்வு, கிரணி, வயற்றுவலி
மேல்கட்டு நீர்க்கட்டு, அரோசிகம் வாந்திபேக்கம் போன்ற
இவைக்கும்.

வீக்கத்துக்கு

சீமஞ்சள், உளசிகொந்தும், அர
பொடி, சவ்சாரா, சனசத்து, நெல்லிக்காய்
கெந்தகம், சீனக்காரம், வெங்காரம், நவச்சாரம்,
கல்நாரு, சவ்டு, காக்காசிப்பி வகைக்கு வராக
னிடை 1 கல்வத்தில் நன்றாய் பொடி செய்து
வைத்துக்கொண்டு ஒரு கரண்டியில் 11 வராகனிடை
உப்பை போட்டு அடுப்பேற்றி கடுந்தீ எரித்து
உப்பு உருகும் பதத்தில் கொஞ்சம் கொருக்காய்
புளியம் பிஞ்சு போலே நறுக்கி ஒருதுண்டு
பண அளவு மேல்படி உப்பில் போட்டு
கிண்டவும் உப்பு நன்றாயுருகும் அச்சமயத்தில்
10. அந்த சமயத்தில் முன்னமே பொடி செய்து இருக்கும்
11 சரக்கையும் ஆனால் அஞ்சு நாமமாய் உருவை
உப்பில் போட்டு கிண்டி தீ எரிக்க எல்லாம்
சேர்ந்து உருகி உப்பை கரு போலே உருகி
பதத்தில் தரையில் ஊத்தி ஆறிட்டு கல்வத்தில்
பொடி செய்து வைத்து கொண்டு ஒரு காசயெடை
வீதம் அந்தி சந்தி அஞ்சுநாள் 7-நாள், 11-நாள்
வரையில் இதின் மாத்திரை சொல்லுகிற கசாயத்தில்

போட்டு கொடுக்க தீரும். நோய் மேகத்தாலும் இருமலினாலும் பிசப்பாண்டு, வாதடியாலும் கிராணி அதிசாரத்தாலும் நேருண்டான சகல வீக்கங்களும் தீரும்.

## சகல வீக்கங்களுக்கு

அருகம்வேர், மிளகு, சீரகம், கொத்தமல்லி, சுக்கு, கடுக்காய், சூர்த்தாவரை மரப் பட்டை, பறங்கிக்கிழங்கு, அமுக்கராக்கிழங்கு, கோரைக்கிழங்கு, கோவைத்தண்டு, சீந்திக்கொடி, சுரைத்தண்டு, மாமானைத்தண்டு, வேம்பயீர்க்கு,
11. நெல்லியீர்க்கு, வேப்பாலையீர்க்கு, நாரத்தையீர்க்கு, தும்பை, துளசி, குப்பைமேனி, கண்டங்கத்திரி, தூதுவளை, நீர்முள்ளி, பற்படாகம், மறமய்ப்பூண்டு, விஷ்ணுகிரந்தி, கரிப்பான், ஆடாதோடை இலை, சித்தாமுட்டிவேர், பேராமுட்டி, செருநாட்டிவேர், சங்கம்வேர், சிறுகீரைவேர், திருவாதியிலை, தென்னம் பாளை, வில்வயிலை, பொடுதலை, நுணாயிலை, நாயுருவி ஆக கூடு 42-ம் வகைக்கி சமனாக வாங்கி உரலில் இடித்து தூளாக்கி காயவைத்து

வைத்து கொண்டு ஒரு பலம் அல்லது 1½ பலம் துளை
ஒரு சட்டியிலிட்டு அதன் ½ படி பட்டணம் படி
தண்ணீர் விட்டு அது சுமாரந்து காடி ½ வீசம் படி
ஆட்டு நீர் ½ வீசம் படி, இளநீர் கால் படி
இவைகளை கூட விட்டு அடுப்பேற்றி பட்டணம்
படி ஒரு வீசம் படியாய் சுண்டி எடுத்து முன்
சொல்லிய சலமஞ்சளைய கூட்டிச் சாப்பிடவும்
சகல வீக்கமுந் தீரும். இந்த கஷாயம் 5-நாள், 7-நாள்
11-நாள் வரைக்கும் சாப்பிடவும். இதற்கு பத்திய
12. ம்இல்லை. இதன் பின்னால் அயகாந்தம் செந்தூரம்
மண்டூரம் இதுகளை ¼ மண்டலம், ½ மண்டலம்
தேனாவது சுக்கு, திப்பலி, அரிசித்திப்பிலி வறுத்த
சூரணத்தில் தேன் கூட்டி மண்டூரம் வைத்துச் சாப்பிடவும்
சரீரத்தில் சகல வீக்கமும் தீரும்.

அயகாந்த மண்டூரஞ் செய்வது

இரசம் வராகனெடை 5,
நெல்லிக்காய் கெந்தகம் வராகனெடை 5 இவை
ரெண்டும் கல்வத்திலிட்டு ரசம் மாறும் படி
இரண்டு நாழிகை அரைத்து அரப்பொடி வராகனெடை 5

காந்தம் வராகனெடை 5 இவை இரண்டும் கூட்டி
ஆக நாலு சரக்கும் நன்றாய் பொடி செய்து ஒரு
சட்டியில் கந்தகத்தை மட்டும் பொடியாய் அள்ளி
போட்டு கடுக்காயை தூள்செய்து அதில் போட்டு
பிசைந்து ஒரு நாழிகை வைத்திருந்து பிறகு
பிசைந்து பசைய் சாறு விடும் அந்த சாற்றை
வடிகட்டி வைத்துக் கொண்டு கல்வத்திலிருக்கும்

13. பொடி மேல்கூட்டு நாலு சாமம் அரைத்து
வெய்யிலில் காய வைத்து பொடி செய்து வைத்து
கொண்டு முன் சொல்லப்பட்ட நோயும் சுக்கு,
மிளகு, அரிசி, திப்பிலி சமனெடையாய் வறுத்து
தூள் பண்ணி வைத்து கொண்டு இந்த தூள் ஒரு
வராகனெடை அல்லது 1½ வராகனெடை தூளில்
தேன் கூட்டவும். இஞ்சி சுரசம் பண்ணியும்
இதுகளில் மண்டேரம் வைத்து கொடுக்கவும். சகல
உக்கமும் மேக வாய்வு, வயிற்றுவலி, குன்மம், பித்த
சோகை, அஜீரணபேதியும், சோம்பலை இவையாவும்
தீரும். பசியுண்டாகும்.

## மேகவெள்ளைக்கு எண்ணெய்

பூரம் வராகனெடை 5, நெல்லிக்காய்
கெந்தகம் வராகனெடை 5, வெள்ளை குங்கிலியம்
வராகனெடை இம் மூன்றும் கல்வத்தில் பொடி
செய்து கொஞ்சம் ஆமணக்கெண்ணெய் விட்டு ஒரு
நாழிகை அரைத்து 1½ மாகாணி படி ஆமணக்கெண்
ணெயில் குழப்பி வைத்து கொண்டு காலமே இரண்டு
கரண்டியும் அந்திக்கு ½ கரண்டியுமாய் அந்தி
சந்தி 3 நாள் சாப்பிடவும். எண்ணெய் சாப்பிடும்
நேரத்தில் எண்ணெயை குழப்பி நெய் போலே
14. வெளுத்திருக்கும் போது மருந்து சாப்பிடவும். இம்
மூன்று நாளும் தண்ணீரில் குளிக்காமல் நாலாநாள்
ஆமணக்கெண்ணெய் முழுகவும். பத்தியம் புளி, புகை
யிலை தள்ளவும்.

## அரையாப்பு

கொல்லன் கோவைக்கிழங்கு
சேர் நேர் சீமை நல்ல மேற்படி கிழங்குப்பலம்
ஒன்று, அம்மைக்கிழங்கு பலம் ஒன்று, கொடி
வேலி வேர்ப்பட்டை ½ பலம், வெங்காயம் பலம் 1

இவையெல்லாம் அம்மியிலே நசுக்கி சட்டியிலிட்டு
விளக்கெண்ணெய் 1/4 படி, நல்லெண்ணெய் 1/4 படி
கூட்டி ஊட்டு மிருதாரசிங்கி வராகனெடை 2
பொடித்து போட்டு அடுப்பேற்றி எரித்து இவை
யெல்லாம் மொறு மொறு பதத்தில் ஒரு கல்சத்தில்
வடித்து கொள்ளவும். எண்ணெய் வடிக்கு
கல்சத்தில் ஒருமிளகு கரும்புட்டியை தூள் செய்து
போட்டு வடித்து கொண்டு எண்ணெய் வருந்த
குழகை காலமலம் உதிரம் திரிக சொல்ல ஒரு
கரண்டி எண்ணெயுங் சாப்பிட சொல்லவும்.
இந்தபடி அந்தி சந்தி 6-நாள் சாப்பிடவும்.
15. பத்தியம் புளியில்லாமல் துவரம் பருப்புடன் பசு
நெய் கூட்டி சாப்பிடவும். வெந்நீர் கொள்ளவும்.
7-நாள் மேற்படி எண்ணெயை தேய்த்து தலை
முழுகவும். புளி கூட்டி சாப்பிடவும்.

## சுரத்துக்கு அயன் குளிகை

அயன் வராகனெடை - ரு
சுக்கு வராகனெடை ஊ, திப்பிலி வராகனெடை 1,
சீரகம் வராகனெடை க ஊ, மிளகு வராகனெடை கவ

இந்த 5 சரக்கும் பாகத்தை கல்வத்திலிட்டு
உத்தாமணி கரந்தை கசாயம் விட்டு நாலு சாமம்
அரைத்து குன்றிமணி அளவு உருண்டை செய்து
செப்பால் வைத்து கொண்டு வில்வவேர் உத்தாமணி
கரந்தை, சீரகம், வெற்றிலை காம்பு இவை நாலும்
கசாயம் பண்ணி இந்த கசாயத்தில் ஒரு உருண்டை
வைத்து கொடுக்கவும். இந்தபடி அந்தி சந்தி
மூன்று நாள் கொடுக்கவும். சுரங்களும் சுரத்தின்
மேல் காய்ச்சலும் தாப சுரமும் தீர்ந்து சுக
முண்டாகும். புளியில்லா பத்தியம். குழந்தை
முதல் எல்லோருக்கும் ஆகும்.

## கோரோசனை மாத்திரை

பளிங்கு சாம்பிராணி நல்லாய்
ஒரு பலம் இரண்டு வாங்கி பொடித்து ஒரு கல்வத்தில்
போட்டு கடுதாசியை சுருள பண்ணி கல்வத்தின்
வாயால் குழலைப் போல் போட்டு நூல்
16. கயிற்றால் வேடு சுற்றி குலையாமல் சந்தி கட்டி
அடுப்பால் வைத்து அடுப்புக்குள்ளே நெய் விளக்கு
ஏற்றி நாலு சாமம் மூன்று சாமம் தீபம் எரித்து

கலயத்தில் அடைத்தால் சூடேறி மேலுள்ள காயத்தின்
பதங்கம் ஊளையும் அப்பதங்கம் அசப்பால் வைத்துக்
கொண்டு வெற்றிலையால் மலைகளவு பதங்கம் தின்றுவர
தாதுவாற்றியும் பசிதீபனமும் உண்டாகும் வாய்
நாற்றமும் தந்த ரோகமுந் தீரும்.

இந்த சாம்பிராணிப் பதங்கம்

வராகனெடை 2, கிராம்பு வராகனெடை 3, கோரோசனை
வராகனெடை 1 இம்மூன்று சரக்கும் கல்வத்திலிட்டு
வெற்றிலைச்சாறு விட்டு இரண்டு நாழி அரைத்து
குன்றுமணிபோல் உருண்டை செய்து நிழலில்
உலர்த்தி செப்பால் வைத்து கொண்டு வேளைக்கு
ஒரு மாத்திரை வீதம் மூன்றுநாள் கொடுக்கவும்.

பட்டுகருப்பு செந்தூரம்

இஞ்சி சாரசம், சுக்கு, சித்தரத்தை

17. சுத்தி செய்த ரசம் அரைக்கால்பலம் சுத்தி செய்த
நெல்லிக்காய் கெந்தகம் அரைக்கால் பலம் இது
இரண்டும் கல்வத்திலிட்டு பொடி செய்து ரசமும்
கெந்தகமும் ஒன்றாய் சேர்ந்து பொடியாகும்
வரைக்கு பொடித்து கொஞ்சம் ஆலக்கெண்ணெயால்
விட்டு அரைத்து அதிகமாய் எண்ணையை விடாமல்
மருந்தை திரட்டி எடுத்து பத்துக்கு தக்கதாய் கொஞ்சம்

எண்ணெயை குந்தி இரு சாமம் அரைத்து மருந்தை
வழித்து உருண்டை செய்து மஞ்சளயுள்ள பட்டு
துணியால் பொதிந்து சுத்தி கொடுவேலவேர்ப்பட்டை
-யை அரைத்து கவசம் கட்டு இருமண் சிலையா
-லிட்டுச் சில்லிட்டு சீலைமண் ஏழு செய்து காய
வைத்து மணல் மறைவால் நாலஞ்சு எருவால் புடம் போட்டு
ஆறிய பக்குவத்தில் எடுத்து பார்க்கவும். நவமணியா
செந்தூரமாகும். அந்த செந்தூரத்தைப் பொடித்து
18. வைத்து கொண்டு மூலம், பகந்திரம் கல்லடைப்பு,
சீதடைப்பு தாராமல்கிறதுஅடைப்பு, மேகவட்டை,
உதிரச்சிக்கல், விரைக்கமுண், யோனிப் புண்கள்,
அரையாப்பு, கிரல, வாய்வு, வயிற்றுவலி, மாரடைப்பு,
மூச்சடை வாய்வு, சுரஞ்சன்னி, தோசம், நாவரட்சி
இதுகளுக்கு குழந்தைகளுக்கு மாந்ததோசம், கிருமேன்,
சிறுக்கிருமென், சந்தாரதோசம் இதுகளுக்கு அந்தி
சந்தி 10-நாள் தேனில் சாப்பிடவும். சுகமுண்டாம்
புளி, புகையிலை தள்ளி பத்தியம் இருக்கவும்.

சின்னி அரங்களுக்கும் பிள்ளை பெத்த
-வளுக்கும் வெண்ணெய் நெய் தேன் இவைப்போல்
அரசுகள் பண்ணவேண்டும் இதுகளில் 3-நாள், 5-நாள்
7-நாள் கொடுக்கவும். தீரும் சன்னியினால் அடங்காத
தாகம் எடுத்து நாவறட்சியுண்டானால் ஒரு
நாழிகை நேரத்தில் இரண்டு தடவை தேனில்
கொடுக்கவும். சுகமுண்டாம்.

## நீர்சுநின்றபேருக்கு

எட்டிக்கி நல்ல ஏகு தோண்டி தான்றிக்காய்
வட்டமுடன் தாமரைக்கி. ஆ- உமத்து பேட்டியின
19. திருவாரியாம் கள்ளிக்கி அரளிக்கி கடுக்காய்
மெய் தேன் நெய்யுக்கி எருக்கு காவோலை குருகு
பண்டுக்கு சங்கபலம் வேருத்த செவ்வந்திக்கி
வெவேளை மஞ்சள் வெந்தையமும் நல்லெண்ணெய்
விளாவு கிடைப்பதற்கு முத்திரை தேங்காய்பால்
குதிருந்தோடு நாவுக்கி குறிகிறை நற்கொண்ட
வெங்காரம் தாவாய மாசனிக்கு தனிமாலு
நேர் வேரும் சர்க்கரையும் நேராக
கொண்டவர்க்கு சொன்னோம். இந்நாளுக்கி நில
திருமென்று நிச்சயமாய் மாகுளிவர் பொதிந்தான் பாவனா

## லிங்க செந்தூரம்

கோழிமுட்டையை
போல சீலை எடுத்து 1/2 பலம் லிங்க கட்டிக்கு
அரைக்கால் பலம் வீரத்தை கல்வத்திலிட்டு வாய்
நீரைவிட்டு அரைத்து சேர்பட்டு லிங்கத்துக்கு
கவசம் செய்து கரு வெயிலில் காயும் பக்குவத்தில்
உடனே சுண்ணாம்புச் சீலை செய்து காய
வைத்து அரைக்கால் படி கொள்ளும் படியான
ஒரு சிறு கலயத்தில் அரைக்கவும். உமி போட்டு
மேலே கவசம் செய்து லிங்கம் வைத்து மேலும்
20. கலய நிறைய உமி கொட்டி அமுக்கி சில்லிட்டு
செய்து மூன்று உசரம் (மூன்று உயரம்) போட்டு உமி
கருகி பக்குவம் புகம் பார்த்து புடம் ஆறின கலயத்து
ஆறவைத்து கவசம் மாற்றி சுண்ணாம்பு கவசத்தை
தள்ளி வீர கவசம் உள்பட லிங்கத்தை
கல்வத்தில் பொடி செய்து வைத்து கொள்ளவும்.
சுரம், சன்னி தோஷம், சீதளம், வாய்வு முதலியன
சுரங்களின் பனைவெல்லம் இதுகளில் மூன்று நாள், 5-நாள்
7-நாள் கொடுக்கவும் தீரும் சன்னியினால் அடங்காத
தாகம் எடுத்து நாவரட்சியுண்டானால் ஒருநாழிகை

நெற்றியில் இரண்டு தடவை தேன் தேன்
கொடுக்கவும். சுகமுண்டாம் கர்ப்பமன, காசம்
மாந்தாரகாசம் இதுகளுக்கு அந்தி சந்தி 10-நாள்
தேன் கொடுக்கவும். சுகமுண்டாம். புலி,
பூனையனை தள்ளி பத்தியம் இருக்கவும்.

௨ தாளக்கட்டு

எவ்வாறு தோலாக யென்றால்
பூமியின் மேல் புல்லுகளா இல பொருளென்றும் பேர்
அது அநேக மலையில் இருக்கிறது மேற்படி
பச்சையிலை கொண்டுவந்து செம்பிள்ளிச்
சாறும் இரண்டு சமமாய் அவது அன்னது நூற்றுக்கு
ஒரு பட்டுக்கட்டு அம்சமம் தாளகத்தை
மேற்படி ஒட்டின்வைத்து சுருக்கு ரெண்டு
மூணு சாமம் கொடுக்க கட்டும் அதை செம்பு
கலசில் பச்சை இலை சாறு அரைத்து
கட்டின தாளக பொட்டணயை கீழ் மேலும்
அகலில்வைத்து நடுவே செம்பு காசவைத்து
இரண்டு அகலும் பொருந்த மூடி பூரம், வீரம்,
துருசு, வெங்காரம். நவச்சாரம் இந்த அம்ச

சீரக்கையும் வெள்ளருகு சாறுவிட்டு கடுக்கை
சாறும் விட்டு செய்நீர் விட்டு அரைத்து காதில்
பூசி மேற்படி கட்டின தாளக மொட்டையை
போட்டு புடம் போடவும். பற்பமாகும்
3 இளை தாமரை சாற்றில் இரண்டு புடம் போடவும்.
நீர்ராய் நீங்கு போகும். மேற்படி தாளகத்தை
செம்முள்ளி சாறுவிட்டு அரைத்து புடம்
போட பற்பமாகும். வெட்டையும் செய்நீர்
மேக சொல்லையும் செய்நீர். இந்தப்படி கருவங்கம்
22. போடவும்

பாண்டு காமாலை. கிளை சேர்ந்த உபாதிக்கு

காந்தம், அயம், வங்கம்,
கெந்தகம், ரசம், தாளகம், கல்நார், கல்மதம்,
மனோசிலை இவைக்கு ஒரு வராகனெடை இதும்
நிறுத்து எடுத்துக் கொண்டு கத்தாழையை அறுத்து
துண்டாக துண்டாக அறுத்து போட்டு
கடுக்காய் தூளை அதில் போட்டு தண்ணீர்
தெளிந்த பிற்பாடு அந்த தண்ணீர் விட்டு மேற்
படி ஒன்பது சரக்கையும் அரைத்து மேற்படி
கத்தாழை சாற்றில் கெசம் இரண்டு போடவும்.

23. காப்பான சூத்தில் ஒரு புடம் போடவும். மருதம் பட்டையில் ஒரு புடம் போடவும். நாவல் பட்டையில் ஒரு புடம் உதயம் பட்டையில் ஒரு புடம் கல்லத்தியால் ஒரு புடம் அரசம் பட்டையில் ஒரு புடம் ——————

(இத்தனை தொடர்ந்து இலையால் எருக்கம்பட்டையில்)

## குன்மவலிக்கு எண்ணெய்

24

நீர்முள்ளிவேர்ப்பட்டை தூள்படி-4- கத்தாழை சோற்றில் போட்டு பிசைந்து ஒருநாள் வைக்க தண்ணீராகும் மேற்படி தண்ணீர் படி2 நாள் பழுத்து சாறுபடி-1 செவ்வல்லி கொடிசாறு படி-1, கறுப்போக்கியை அருகம்வேர் படி1 தூளாய் இடித்து எட்டுபடி தண்ணீரில் போட்டு காய்ச்சி கஷாயம்படி1, இளநீர்படி1 ஆட்டுப்பால்படி-1, ஆமணக்கெண்ணெய்படி-1 எல்லாம் ஒரு பாண்டத்திட்டு அதிமதுரம் பலம்-2, ஜவம்பலம்1 கிள் சொல்லாய இடப்பில் ஆட்டு அரைத்து இதையா அடுப்பேற்றி மெழுகு பதத்தில் எண்ணெயை வடித்து குங்குமப்பூ பலம்-4 பொடித்து போட்டு வைத்துக் கொண்டு சதிரமேலாந்து கணபதி பூசை செய்து

25. காலையில் ஒரு கரண்டி இரவும் காலையில் ஒரு மண்டலம் சாப்பிடவும். இச்சாபத்தியம் தள்ளுபடி மேற்படி எண்ணெய் சாப்பிட்டதின் மேல் வீர செந்தூரம் 1/2 மண்டலம் சாப்பிடவும். குன்மவலி தீரும். சுகமுண்டாம். சொக்கலிங்கதுரை

## பேதிக்கிரந்தி எண்ணெய்

26.

பெருங்காயம், இந்துப்பு, அரிசி, திப்பிலி, கருஞ்சீரகம், கார்போகரிசி வகைக்கு வராகனெடை கவ சுத்தி செய்த நேர்வாளம் பருப்பு வராகனெடை 2 கொட்டை போக்கிய கடுக்காய் தோல் வராகனெடை 10 தோல் போக்கி உரித்த வெள்ளைப்பூடு வராகனெடை 10 இவை எல்லாம் வேலிப்பருத்திச் சாறு விட்டு அம்மியில் மெழுகு போல் அரைத்து ஒரு சட்டியிலிட்டு அதில் 1/2 படி வேலிப்பருத்திச் சாறு விட்டு 1/2 படி தேங்காய்ப்பால் விட்டு அரை வீசம் படி எருக்கம்பால் விட்டு மருந்தை எல்லாம் நன்றாய் கிளப்பி அதில் வீசம் அரை வீசம் படி இலக்கெண்ணெய் விட்டு அடுப்பேற்றி எரித்து

மெழுகு பதத்தில் எண்ணெய் வடித்து தணலில்
27 பொரித்த வெங்காரம் பொரி வீராகரணை,
எண்ணெயால் போட்டு சீசாவிலடைத்து வைத்துக்
கொண்டு இரு கரண்டி அல்லது அரை கரண்டி
வீதம் சீர்வழுவிந்து கொடுக்க கல்லினை
வாட்டிய காய்ந்த சாறு அரைக்கால்படி அல்லது
வீசம்படி சாற்றில் மேல்படி எண்ணெய் விட்டு
சாப்பிடவும். பேதியாகும். பத்தியம் தெரிந்தும்
காரமாயுள்ள புளி சேர்ந்த மிளகுநீருஞ் சாதமும்
காலாகாரம் செய்யவும். மறுபடி பேதியாகி
சீதம் கழியுண்டானால் அந்தசமயம் அல்லது
வெந்நீரில் நன்றாய் தலை முழுகி புளித்த மோருஞ்
சாதமுமாய் காலாகாரம் செய்யவும். மேலும்
கழியுண்டானால் எலுமிச்சம்பழம் சேர்த்து
28. கொள்ளலாம். சில ரோகமுள்ளவர்களுக்கு இந்த
எண்ணெய் கொடுத்தால் புளியில்லா காயும்
கீரையும் வைத்து சாப்பிடவும். மாறு
நன்றாய் பேதியான பின் அந்த தண்ணீர் வெந்நீ
ரில் தலை முழுகி பின் சொல்லியபடி மோருஞ்

சோறும் சாப்பிடவும். அன்று ராத்திரிக்கு
வெங்காயம் துவரை பருப்பு, மாங்கொட்டை
வெள்ளைப்பூடு, கத்திரிக்காய், முருங்கைக்காய்
இவைகள் புளி கொழம்பு செய்து வேண்டியது
சாப்பிடவும். மறுநாள் காலை சீக்கிரம் பழைய
முதல் ஆகாரம் பார்க்கவும். உடனே
நல்லெண்ணெய் தேய்த்து தலை முழுகவும். இது
மேக வாய்வு, குளிர், வயிற்றுவலி, மலக்கட்டு
நீர்க்கட்டு, பித்தம், அரோசியம், வாந்தி,
29. மயக்கம், சோகை குணம் இலவந்திடும்.

———x———